## .மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி
## அசல் வழக்கு எண்.135 /2019

PW1 – ஜெகபர் சாதிக் த/பெ முகமது ஏகையா
நாள்–21.02.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

வா.சா.ஆ.1 உடன் இணைக்கப்பட்டுள்ள கிராம நிர்வாக அலுவலர் சான்றில் தாவா சொத்து வள்ளுவர் தெருவில் அமைந்துள்ளதாகத்தான் சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் வில்வராயன் நத்தம் பகுதிக்கு உட்பட்டதுதான் வள்ளுவர் தெரு ஆகும். தாவா சொத்து வில்வராயன் நத்தத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 உடன் இணைக்கப்பட்டுள்ள கிராம நிர்வாக சான்றில் சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்பதை குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. செம்மங்குடி நத்தத்தில் வில்வராயன் நத்தம் என்பது ஒரு தனி கிராமம் என்றும் வள்ளவர் தெரு என்பதும் ஒரு தனி கிராமம் என்றால் சரியல்ல.வில்வராயன் நத்தத்தில் நான் சொல்வது போல் வள்ளுவர் தெரு என்றே இல்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1–ல் வள்ளவர் தெரு என தவறுதலாக குறிப்பிட்டுள்ளதை மறைப்பதற்காகத்தான் வில்வராயன் நத்தம் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து அமைந்துள்ள தெருவில் வடக்கு புறம் கணவர்மார்களுக்கும், தெற்கு புறம் மனைவிமார்களுக்கும் தான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய முன்பாத்தியஸ்தரான சம்மந்தம் சிவன் கோயில் அம்பேத்கர் காலனியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். சம்மந்தத்திற்கு அம்பேத்கர் காலனியில் தான் பட்டா உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஒரே நபருக்கு 2 பட்டா வழங்க இயலாது

என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது.

தாவா சொத்திற்கு சம்மந்தம் பெயரில் வழங்கப்பட்ட அசல் பட்டா நான் பெற்றுக்கொண்டேனா என்றால் அவர் தொலைத்துவிட்டார். சம்மந்தத்திற்கு பட்டாவே வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. வில்வராயன் நத்தம் தெரு குறுகிய தெரு என்றால் சரியல்ல. நான்கு சக்கர வாகனங்கள் செல்ல இயலாது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆன புகைப்படங்கள் இவ்வழக்கிற்கு தொடர்பில்லாதது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் எனக்கு ஆதரவாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.